2001 செப்டம்பர் 10]

பள்ளிப்பட்டு மற்றும் கிருஷ்ணாபுரம் ஆகிய ஆறு வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு 11-வது நிதிக் குழுவின் மானியத் தொகையிலிருந்து கட்டடம் கட்டுவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள திருக்கழுக்குன்றம் உள்ளிட்ட இதர 18 வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு அரசுக் கட்டடம் கட்டும் பணி அரசின் நிதிநிலைக்கேற்ப மேற்கொள்ள வேண்டியிருப்பதால், திருக்கழுக்குன்றம் வட்டாட்சியர் அலுவலகம் கட்டடம் கட்டும் பணி அரசின் நிதிநிலைக்கேற்ப மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. கருணாகரன்.

திரு. கே.சி. கருணாகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றிய அலுவலகங்கள் இயங்கும் பல சொந்தக் கட்டடங்கள் damage ஆகியிருக்கின்றன. அவற்றிற்கு வேறு வருமானமும் இல்லை. எனவே, எம்.எல்.ஏ.-க்கள், எம்.பி.க்கள் நிதியிலேயிருந்து கட்டுவதற்கு அனுமதி அளிப்பது பற்றி அரசு.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கருணாகரன், மாண்புமிகு அமைச்சரால் வட்டாட்சியர் அலுவலகத்திற்குத்தான் பதில் தர முடியும். ஒன்றிய அலுவலகத்தைப் பற்றிக் கேட்டால் அவரிடம் பதில் இருக்காது.

வினா எண் 72, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளின்படி தள்ளிவைக்கப்படுகிறது.

வினா எண் 73, திரு. மு. கார்த்தி, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

73—

கால்நடை மருத்துவமனை

***3401—திரு. மு. கார்த்தி:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம், 2-வது தொகுதி, செட்டிசாவடிப் பகுதியில் நடப்பாண்டில் கால்நடை மருத்துவமனை அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

திரு. மு. கார்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம், 2-வது தொகுதி செட்டிசாவடிப் பகுதியிலும் ஏற்காடு மலை அடிவாரப் பகுதியிலும், அருகிலே இருக்கின்ற கருங்காலி, குறுவம்பட்டி ஆகிய கிராமப் பகுதிகளிலும் பல்வேறு கால்நடைகள் உள்ளன. அந்தப் பகுதியிலே இதுவரை கால்நடை மருத்துவமனை இல்லாமல் மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வரவேண்டுமென்றால் நகரப் பகுதிக்கு வரவேண்டியிருக்கிற காரணத்தினால் அரசு கால்நடை மருத்துவமனை ஒன்று அங்கு அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கால்நடை மருந்தகத்திற்கும் புதிய கால்நடை மருந்தகம் தொடங்கக் கோரும் கிராமத்திற்கும் இடையே சுமாராக 8 கிலோ மீட்டர் தூரம் இருத்தல் வேண்டும். சேலம் ஊராட்சி ஒன்றியம் செட்டிசாவடி கிராமத்திற்கு இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் முறையே மேட்டு ஐயம்பொன்பட்டி என்னும் இடத்தில் கால்நடைக் கிளை நிலையமும், வினாயகம்பட்டி என்னும் இடத்தில் பார்வைக் கிளை நிலையமும், நான்கு கிலோ மீட்டர் தூரத்தில் சர்க்கார் கொல்லம்பட்டி என்னும் இடத்தில் கிளை நிலையமும், ஐயம்பெருமாள்பட்டியில் பார்வைக் கிளை நிலையமும் செயல்பட்டு வருவதால் செட்டிசாவடி கிராமத்திலுள்ள கால்நடைகளுக்கு மேற்கண்ட கால்நடை நிலையங்கள் மூலமாக சிகிச்சை அளிக்கக்கூடிய வாய்ப்புகள் இருப்பதால், சேலம் ஊராட்சி ஒன்றியம் செட்டிசாவடி கிராமத்தில் புதிய கால்நடை மருந்தகம் தொடங்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 74, திரு. லா. சந்தானம், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

74—

தொழிற்சாலை

***681—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—